08.01.16

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### குறுகிய கால பயிர்களுக்கு மாறும் விவசாயிகள்

அயோத்தியாப்பட்டணம்:சேலம் மூக்கனுார் பகுதியில், மஞ்சள் சாகுபடியிலிருந்து, குறுகிய கால பயிர்களுக்கு விவசாயிகள் மாறுகின்றனர்.

அயோத்தியாப்பட்டணம் மூக்கனுார் பகுதியில் கடந்த காலத்தில், உ00 ஏக்கர் பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பகுதியில் போதுமான அளவு மழை இல்லாததால், மஞ்சள் சாகுபடிக்கு மாற்றாக குறுகிய கால பயிர்களை விவசாயிகன் நடவு செய்கின்றனர்.

இதுகுறித்து, மூக்கனுாரை சேர்ந்த விவசாயி சோமசுந்தரம் கூறியதாவது: கடந்த, உ0கஉ வரை மூக்கனுார் பகுதியில் மட்டும், உ00 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் விளைந்தது. அதன் பின், போதுமான அளவு மழை இல்லாததால் படிப்படியாக மஞ்சள் சாகுபடி பரப்பு குறைந்து, தற்போது, 10 ஏக்கருக்கு குறைவாகவே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை இல்லாமல் கிணற்று நீரும் வற்றி வருவதால், மஞ்சளுக்கு பதிலாக குறுகிய கால பயிர்களான காய்கறி, தக்காளி, கீரை போன்றவற்றை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

### பயறு உற்பத்தியாளர்களுக்கு சிறுவாச்சூரில் பயிற்சி முகாம்

தலைவாசல்:தலைவாசல் ஒன்றியம், சிறுவாச்சூர் கிராமத்தில், விதை கிராம திட்டத்தின் கீழ், பயறு விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) ஜானகி தலைமையேற்றார். ஆத்துார் விதை சான்று அலுவலர் ரவிச்சந்திரன், கரு விதை, ஆதார விதை, சான்று விதைகளை கொண்டு விதை பண்ணை அமைத்தல், விதை பண்ணை பதிவு செய்தல், கலவன் அகற்றுதல் குறித்து பேசினார்.துணை வேளாண்மை அலுவலர் ஆனந்தன், பயறு வகை சாகுபடி குறிப்புகள், விதை உற்பத்தி

தொழில் நுட்பங்கள், பயறு வகை உற்பத்திக்கு மானியம் பெறுதல் குறித்து விளக்கினார். 50க்கும் மேற்பட்ட பயறு உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் ரவி, உதவி வேளாண்மை அலுவலர் சுப்ரமணி, முருகேசன் ஆகியோர் செய்தனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் ரபி முன்பருவ விழிப்புணர்வு விழா

திண்டிவனம்: வேளாண் அறிவியல் நிலையத்தில் ரபி முன்பருவ விழிப்புணர்வு விழா நடந்தது. திண்டிவனத்திலுள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ரபி முன் பருவ விழிப்புணர்வு விழா நடந்தது. விழுப்புரம் மாவட்ட கூடுதல் கலெக்டர் ஜெயசீலன் தலைமை தாங்கி பேசினார். அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா வரவேற்றார். ரபி முன்பருவ விழிப்புணர்வு கையேட்டினை, விழுப்புரம் எம்.பி., ராஜேந்திரன் வெளியிட்டு, சிறப்புரை நிகழ்த்தினார். திண்டிவனம் எம்.எல்.ஏ.,அரிதாஸ், விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் ரத்தினசபாபதி, திண்டிவனம் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் வைத்தியநாதன், உதவி வேளாண் இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

முன்னதாக, ரபி முன்பருவத்தை முன்னிட்டு, வேளாண் வளாகத்தில் விவசாயிகளுக்கான கண்காட்சி அமைக்கப் பட்டிருந்தது. இதில் நெல் நாற்று நடுவதற்காக புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகள், புதிய ரக பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள் உள்ளிட்ட விவசாயிகளுக்கு அதிக விளைச்சலை தரக்கூடிய பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

விழாவில் இயந்திரத்தின் மூலம் நாற்று நடுவது, நேரடி நெல் விதைப்பது குறித்து, செய்முறையுடன் விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, வறட்சியால் பாதிக்கப்பட்டு, தத்து எடுக்கப்பட்ட காட்டுச்சிவிரி கிராமத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு மணிலா விதைகள் வழங்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலையத்தின் உதவி பேராசிரியர்கள் ஜெயச்சந்திரன், கவிதா, ராதாகிருஷ்ணன், சங்கீதா, பாலுமகேந்திரன், நகராட்சி கவுன்சிலர் ஜனார்த்தனன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.வேளாண் அறிவியல் நிலையத்தின் உதவி பேராசிரியர் பரமேஸ்வரி நன்றி கூறினார்.

## சாத்தனூர் அணை நீர் திறப்பது குறித்து விவசாயிகள் வரும் 12ம் தேதி முடிவு

திருவண்ணாமலை: சாத்தனூர் அணையிலிருந்து பாசனத்திற்கு எப்போது நீர் திறக்கவேணடும் என முடிவு செய்வதற்காக, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகள், வரும், 12ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் ஒன்று கூடி தெரிவிக்க உள்ளனர். திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையில், கடந்த நவம்பர் மாதம் பெய்த மழையால், முழு கொள்ளளவான, 119 அடியை, கடந்த, 7 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் எட்டியது. அணையிலிருந்து உபரி நீர், 30 நாட்களுக்கும் மேலாக ஏரிகளுக்கு திறக்கப்பட்டது. இதனால், பெரும்பாலான ஏரிகள் நிரம்பி உள்ளன. கிணறுகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. சாத்தனூர் அணை பாசன கால்வாய் மூலம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில், 70 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. தற்போது விவசாயிகள் சம்பா சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வழக்கமாக திறக்கும், 90 நாட்களை தவிர்த்து, 110 நாட்களுக்கு நீர் திறக்க வேண்டும் என, சாத்தனூர் அணை கால்வாய் பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி வருகிறது. இதனால், இரு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளின் கருத்துக்களை கேட்டறிந்து, நீர் எவ்வளவு திறப்பது, எத்தனை நாட்களுக்கு திறப்பது என்பது குறித்து முடிவு செய்ய, வரும், 12ம் தேதி மாலை, 3.30 மணிக்கு, கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகளிடம் கலெக்டர் ஞானசேகரன் கருத்துக்களை கேட்க உள்ளார். அப்போது விவசாயிகள் எப்போது நீர் பாசனத்திற்கு திறந்து விட வேண்டும் என முடிவு செய்து கூற உள்ளனர். அந்த அறிக்கை அரசுக்கு அனுப்பிய பிறகு நீர் திறக்கப்படும்.

## 'மொச்சைக்காய் மேளா' துவக்கம்

வி.வி.புரம், னு : பெங்களூரு, வி.வி.புரம் சஜ்ஜன்ராவ் சர்க்கிளில், 'மொச்சைக்காய் மேளா' நேற்று துவங்கியது; வரும், 24ம் தேதி வரை நடக்கவுள்ளது.

மொச்சைக்காய் மேளாவை, காங்கிரஸ் எம்.எல்.ஏ., தேவராஜ், நடிகை ரூபிகா ஆகியோர் துவக்கி வைத்தனர். ஸ்ரீவாசவி காண்டிமெண்ட்ஸ் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இம்மேளாவில், 108 வகையான மொச்சைக்காய்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட தின்பண்டங்கள் இடம் பெற்றுள்ளன. மொச்சைக்காயால் தயாரிக்கப்பட்ட தோசை, இட்லி, ஜாமுன், பாயசம்,

ஜாங்கிரி, ஊறுகாய், அல்வா உட்பட, பல்வேறு வகையான தின்பண்டங்கள், 20 ரூபாய் முதல், 50 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றன. நடிகை ரூபிகா பேசுகையில், "எனக்கு பிரியமான, பல வகை உணவுகள் இங்கு உள்ளன. இதன் சுவையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. குறிப்பாக, மொச்சைக்காயால் தயாரிக்கப்பட்ட தின்பண்டங்களை யார் தான் விரும்பமாட்டர்," என்றார்.

## பாரம்பரிய தின்பண்டங்கள் பள்ளிகளுக்கு திடீர் உத்தரவு

'பள்ளிகளிலும், பள்ளி அருகிலும் பாரம்பரியமான தின்பண்டங்களையே விற்க வேண்டும். உடல் எடையை அதிகரிக்கும், 'ஸ்நாக்ஸ்' வகைகளை தவிர்க்க, பள்ளி நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, சி.பி.எஸ்.இ., பள்ளிகளுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.அதிக எடை, சோம்பல், சக்தி குறைவு, ரத்த சோகை மற்றும் சிவப்பணுக்கள் குறைவு போன்ற பல பிரச்னைகள், மாணவர்களிடம் காணப்படுகின்றன. இதற்கான காரணங்கள் குறித்து, மத்திய அரசு ஆய்வு நடத்தியதில், குழந்தைகள் உட்கொள்ளும் உணவில் தான் பிரச்னை என்பது கண்டறியப்பட்டது.இதையடுத்து, அனைத்து, சி.பிஎஸ்.இ., பள்ளிகளுக்கும், சி.பி.எஸ்.இ., செயலர் ஜோசப் இமானுவேல் கடிதம் அனுப்பியுள்ளார்.அதன் விவரம்: பெரும்பாலான மாணவர்கள், வீட்டிலிருந்து, 'ஸ்நாக்ஸ்' மற்றும் மதிய உணவு கொண்டு வருவதற்கு பதில், கேன்டீனில் வாங்குகின்றனர். கேன்டீன்களில் சத்தில்லாத, கொழுப்பு சத்து நிறைந்த, பேக்கரி தின்பண்டங்கள் தான் விற்கப் படுகின்றன.எனவே, இதுபோன்ற தின்பண்டங்களை பள்ளிகளிலும், பள்ளிக்கு வெளியிலும் விற்க அனுமதிக்க கூடாது; மாணவர்களும் இந்த உணவு பொருட்களை கொண்டு வரவோ, சாப்பிடவோ கூடாது. பாரம்பரிய உணவுகளான பயறு வகைகள், காய், கனிகள், அரிசி, கோதுமை, பார்லி உணவுகள் போன்றவற்றை, பேக்கரி பொருட்களுடன் சேர்க்காமல் சாப்பிட அறிவுறுத்த வேண்டும். மேலும், மாணவர்கள், 'டிவி' பார்ப்பதை தவிர்க்க வேண்டும். காலை, மாலை வேளையில், சைக்கிள், நீச்சல், கால்பந்து போன்ற விளையாட்டுகளை பழக வேண்டும்; தெம்பு தரும் விளையாட்டுக்களை விளையாட அனுமதிக்க வேண்டும்.பள்ளிகளில் உணவு மேலாண் கமிட்டி அமைக்க வேண்டும்; ஆரோக்கிய உணவு விழிப்புணர்வு நிகழ்ச்சி, போட்டி, உடற்பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இயற்கை எழில் கொஞ்சும் உப்பூர் சதுப்பு நிலக்காடு



ராமநாதபுரம்,:ராமநாதபுரம் மாவட்டம் உப்பூர் அருகே இயற்கை எழில் கொஞ்சும் வகையில் சதுப்பு நிலக்காடு அமைந்துள்ளது.ராமநாதபுரம் மாவட்டத்தில் ஓடும் கோட்டைக்கரையாறு, உப்பூர் காரங்காடு அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இப்பகுதியில் சதுப்பு நிலக்காடுகள் அடத்தியாக காணப்படுகின்றன. இக்காடு கிழக்கு கடற்கரைச்சாலை சேந்தனேந்தல் பாலத்தில் இருந்து ஆற்றின் இருபுறமும் 6 கி.மீ., வரை பரவியுள்ளது. இங்கு வெள்ளை நாரை, சாம்பல் நாரை, செந்நாரை, கருங்குருவி, கிளுவை, கடல் பருந்து, கரண்டிவாயன், பெரிய கொக்கு, மித கொக்கு, ஓலைகிடா, ஆற்று உள்ளான் போன்ற அரிய வகை பறவைகள் காணப்படுகின்றன. இறால், நத்தை, மீன்கள் அதிகளவில் உள்ளன.இந்த பகுதி பார்ப்போரை சுண்டி இழுக்கும் வகையில் உள்ளது. சதுப்புநிலக் காடுகள் இருப்பதால் சுனாமி, புயல் போன்ற பாதிப்புகளும் ஏற்பட வாய்ப்பில்லை. அப்பகுதியை சுற்றுலாதலமாக மாற்ற கூடிய அனைத்து அம்சங்களும் உள்ளன. சிறிய வகை படகுகள் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு காடுகளையும், பறவைகளையும் பார்க்க ஏற்பாடு செய்யலாம்.இப்பகுதி உப்பூரில் இருந்து 3 கி.மீ., லும், தொண்டியில் இருந்து 14 கி.மீ.,லும் அமைந்துள்ளது. சுற்றுலா தலமாக அறிவித்தால் அப்பகுதி வளர்ச்சி அடையும்.

## பொங்கல் பரிசுக்கு கரும்பு கொள்முதல் சில்லறை விற்பனையில் விலை உயரும்

திருப்பூர்: தமிழக அரசு கரும்பு கொள்முதல் செய்வதால், மார்க்கெட்டில் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகையன்று, பச்சரிசி பொங்கல், கரும்பு வைத்து, சூரிய பகவானை வழிபடுவது வழக்கம். அதற்காக, பச்சரிசி,

சர்க்கரை, நுாறு ரூபாயுடன், இரண்டு அடி கரும்பு வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை மற்றும் நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள், கரும்பு கொள்முதல் செய்து, ரேஷன் கடைகளுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, 1.91 கோடி ரேஷன் கார்டுதாரர்களுக்கு, கரும்பு வழங்கப்பட உள்ளது. அரசு கொள்முதல் செய்வதால், வழக்கமாக மார்க்கெட்டுக்கு வரும் கரும்புக்கு பற்றாக்குறை ஏற்பட்டு, விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. திருப்பூரிலுள்ள வியாபாரி கள் கூறியதாவது: கடந்தாண்டு வறட்சி காரணமாக, கரும்பு ஜோடி, 120 ரூபாய் வரை விற்றது. நடப்பாண்டு, மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஏற்கனவே விலை பேசி, வியாபாரிகள் கரும்பு வெட்ட துவங்கியுள்ள நிலையில், அவற்றை அதிகாரிகள் நேரடியாக சென்று, கொள்முதல் செய்து வருகின்றனர்.

இதனால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். ஆனால், வெளி மார்க்கெட்டில் விற்பனை செய்வதற்கு கரும்பு கிடைப்பதில் சிரமம் ஏற்படும்; விலையும் உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ஆயுர்வேத மருந்துடன் 15 உணவு வகை

சிறப்பு நலவாழ்வு முகாமில் யானைகளுக்கு, 15 வகை உணவுடன், ஏழு வகை ஆயுர்வேத மருந்தும், வழங்கப்படுகிறது. யானைகளுக்கு, கூந்தல் பனை, தென்னை மட்டை, புல், கரும்புசோகை, சாறுள்ள கரும்பு, பலா இலை, சோளத்தட்டு, ரீட்ஸ், ஆல், அத்தி, அரசு, மூங்கில், கீரை வகைகளுடன், அரிசி சாதம், பச்சைபயிறு, கொள்ளு, உப்பு, மஞ்சள் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. ஆயுர்வேத மருந்து களான அஷ்டசூரணம், சவணப்ராஸ், பயோ பூஸ்ட் மாத்திரை, லிவ்-52 மாத்திரை, ப்ரோட்டீன் சப்ளிமென்ட், மல்டி வைட்டமின் மாத்திரைகள், மினரல் மிக்சர் தரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தகுந்த எடை இல்லாமலும், சோர்வாகவும் இருக்கும் யானைகளுக்கு கால்நடை டாக்டர்கள் பரிந்துரையின் பேரில், வழக்கமான தீவனங்களுடன், பேரீட்சை, அவுல், கேரட், பீட்ரூட் ஆகிய சிறப்பு உணவு வகைகளும் வழங்கப்பட உள்ளன. யானை களை குளிப்பாட்டுவதற்காக, இரு இடங்களில், வசதி செய்யப்பட்டுள்ளது.

## 22ல் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

ஊட்டி: ஊட்டியில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும், 22ல் நடத்தப்பட உள்ளது. நீலகிரி கலெக்டர் சங்கர் அறிக்கை: விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 22ம் தேதி, காலை, 10:30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடத்தப்பட உள்ளது. இதில், விவசாயம் தொடர்பான குறைகள் இருப்பின், மனுவாக, 'தோட்டக்கலை இணை இயக்குனர், த.பெ. எண்.72, ஊட்டி - 643 001' என்ற முகவரிக்கு, தபாலிலோ, நேரிலோ அனுப்பி வைக்கலாம். இவ்வாறு, சங்கர் கூறியுள்ளார்.

## பழநியில் காய்கறிகள் விலை உயர்வு

பழநி: பழநி அருகேயுள்ள கணக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, மற்றும் எரமநாயக்கன்பட்டி பகுதிகளிலிருந்து விவசாயிகள் காய்கறி, பழங்களை பழநி சண்முகபுரம் உழவர் சந்தைக்கு கொண்டு வருகின்றனர். @காடையில் தினமும் 25டன் வரை உழவர் சந்தைக்கு காய்கறிகள் வரத்து இருந்தது. மழைபெய்து குளங்கள், அணைகளில் தண்ணீர் உள்ளதால் காய்கறிசாகுபடி செய்த விவசாயிகள் பலர் நெல், மக்காசோளம் பயிரிட்டுள்ளனர். இதனால் காய்கறி வரத்து 12 டன்னாக குறைந்துவிட்டது.விலை உயர்வு: சுபநிகழ்ச்சிகளுக்கு விருந்தில் பயன்படுத்தப்படும் காய்கறிகள் கிலோ ரூ.40க்கு மேல் விற்கப்படுகிறது. அதேசமயம் வெங்காயத்தின் விலையில் வரத்து அதிகரிப்பால் குறைந்துள்ளது.நேற்றைய நிலவரம்: ஒருகிலோ கேரட் ரூ.74, மிளகாய் ரூ.70, தக்காளி முதல் ரகம்- 42, அவரை- ரூ.40, வெண்டை-ரூ.40, முருங்கை-ரூ.120, பாகல் ரூ.50, கோஸ்-ரூ.24, சி.வெங்காயம்-ரூ.20, பெல்லாரி-ரூ.22, கத்தரி-ரூ.20, கேரட் ரூ.75, பீன்ஸ் ரூ.30 என விற்பனையானது.உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில்,""கா#கறி வரத்து குறைவாலும் சபரிமலை, தைப்பூசம் காரணமாக விலை உயர்ந்துள்ளது," என்றார்.

## பனங்கிழங்கு, இன்சுவை தவுண்சீசன் விற்பனை அமோகம்

கீழக்கரை:திருப்புல்லாணி, தினைக்குளம், பஞ்சந்தாங்கி, ரெகுநாதபுரம், முத்துப்பேட்டை, பெரிய பட்டினம், சேதுக்கரை உள்ளிட்ட கடற்கரை யோரப் பகுதிகளில் ஏராளமான பனைமரங்கள் உள்ளன. புரட்டாசி, ஐப்பசி

மாதங்களில் பனைமரங்களில் இருந்து கிடைக்கும் பனம் பழங்களை சேகரித்து நிலங்களில் புதைத்து வைப்பார்கள். இரண்டு மாதத்தில் அவை முளைவிடும். தோண்டினால் சுவையான பனங் கிழங்கு கிடைக்கும். இவற்றுடன் பனங் கொட்டையை இரண்டாக பிரித்தால் இன் சுவையுடன் கூடிய பஞ்சு போன்ற தவுண் கிடைக்கும். கால்சியம் அதிகம் என்பதால் சுவை அறிந்தவர்கள் தவுணை விரும்பி வாங்கி செல்கின்றனர். திருப்புல்லாணி சுற்றுவட்டாரப் பகுதிகளில் தற்போது பனங்கிழங்கு சீசன் துவங்கி யுள்ளதால் தவுண் விற்பனை அதிகரித்துள்ளது.

## நெற்பயிரில் இலை கருகல் நோய்:வேளாண்துறை ஆலோசனை

திருப்புவனம்;நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு, இலை கருகல் நோயை கட்டுப்படுத்த, மருந்து தெளிக்குமாறு திருப்புவனம் உதவி இயக்குனர் சுரேஷ்பாபு தெரிவித்தார். அவர் கூறியதாவது: திருப்புவனம் வட்டாரத்தில் 1,020 எக்டேரில் நெல் பயிரிடப்படுகிறது. பனி காலமாக இருப்பதால் நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு, இலைகருகல் நோய் தாக்கும் அபாயம் உள்ளது. இலை கருகல் நோயை கட்டுப்படுத்த ஒரு எக்டேருக்கு "காப்பர் ஆக்சிகுளோரைடு' ஒன்றரை கிலோ, "ஸ்ட்ரோடோமைசின் சல்பேட்' 300 கிராம் ஆகியவற்றை சமஅளவில் கலந்து தெளிக்க வேண்டும். இலைசுருட்டு புழுநோயை கட்டுப்படுத்த ஒரு ஏக்கரில் 4 அல்லது 5 இடங்களில் இனகவர்ச்சி பொறியை அமைக்க வேண்டும். பயிர் நடவு செய்த 37 மற்றும் 44, 51வது நாட்களில் "டிரைகோகிரம்மா' ஒட்டுண்ணிகளை விட வேண்டும், என்றார்.

## மொச்சையில் "வட்டப்பாய்ச்சல்'

விருதுநகர்;விருதுநகரில் பல ஏக்கரில் பயிரிடப்பட்ட மொச்சையில் "வட்டப்பாய்ச்சல்' நோய் தாக்குதலால் விளைச்சல் பாதித்துள்ளது. மாவட்டத்தில் மானாவரி சாகுபடி பெருமளவு நடக்கிறது. சமீபத்தில் பெய்த மழையால் சிறு தானியம், பயிறு வகைகள் பயிரிடப்பட்டுள்ளன. அறுவடை நெருங்கும் நிலையில், அதிக மழை பெய்ததால் விளைச்சல் பாதிப்படைந்துள்ளது. மல்லாங்கிணர், வில்லிபத்திரி, குல்லூர்சந்தை, அருப்புக்கோட்டை, காரியாபட்டி உள்ளிட்ட பகுதிகளில் கருப்பு, வெள்ளை மொச்சை விளைவிக்கப்படுகிறது. இலைகளில் புழுக்கள்:ஜூலை,ஆகஸ்ட்டில் பயிரிடப்பட்ட மொச்சை ரகங்கள் பிப்ரவரியில் அறுவடையாகும். மழை பெய்து

முடிந்ததும் மொச்சையில் புழுக்கள் பெருகியது. இலைகளின் பச்சையத்தை புழுக்கள் மேய்வதால் பூப்பூக்க வழியில்லை. ஓரளவு பூத்து, காய்கள் கொடுக்கும் நிலையில் மொச்சை செடிகளில் "வட்டப்பாய்ச்சல்' நோய் தாக்கி உள்ளது.

வேண்டும் நஷ்டஈடு:வில்லிபத்திரி விவசாயி ஜெயராமச்சந்திரன் ,"" எந்தாண்டும் இல்லாத வகையில் கடும் மழையால் மொச்சை பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் பருத்தியில் ஊடுபயிராக மொச்சை பயிரிட்டேன். இரண்டு மாதத்திலே செடிகளில் "வட்டப்பாய்ச்சல்' வேகமாக பரவியது. பூக்கள் விழுந்து விட்டன. காய்களையும் புழுக்கள் விட்டு வைக்கவில்லை. பூச்சி மருந்து தெளித்தும் பயனில்லை. விளைச்சல் இல்லாததால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் நலன் கருதி அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்," என்றார்.

## நெல், மக்காச்சோள சாகுபடிக்கு ரெயிலில் வந்த 1,341 டன் உரம்



திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஓரளவு பரவலாக பெய்தது. இதனால் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, காய்கறி பயிர்கள் உள்ளிட்டவை அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. இந்த பயிர்களுக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் இடவேண்டிய உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், தனியார் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று ரெயில் மூலம் கூடுதலான அளவு உரங்கள் திண்டுக்கல்லுக்கு வந்தன. இதில் யூரியா 700 டன்னும், டி.ஏ.பி. 387 டன்னும், காம்ப்ளக்ஸ் உரம் 254 டன்னும் வந்திருந்தன. அந்த உரங்கள் அனைத்தும் லாரிகள் மூலம் கடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. மேலும் உரக்கடைகளில் உரங்களின் விலை விவரம் பற்றி அறிவிப்பு பலகை வைக்க வேண்டும். அந்த உரங்களை அரசு நிர்ணயித்த விலையில் விற்க வேண்டும். கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் வேளாண்மை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். மேலும் கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வதை தடுக்க அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## உள்நாட்டு விவசாயம் பாதிக்காத வகையில் அரசின் ஏற்றுமதி –இறக்குமதி கொள்கை இருக்கவேண்டும்: மாநில அமைப்பாளர் பேட்டி




ஈரோடு,

உள்நாட்டு விவசாயம் பாதிக்காத வகையில் அரசின் ஏற்றுமதி –இறக்குமதி கொள்கை இருக்கவேண்டும் என்று விவசாய சங்கங்களின் கூட்டியக்க மாநில அமைப்பாளர் பி.கே.தேவசிகாமணி கூறினார்.

<u>ஏற்றுமதி –இறக்குமதி</u>

விவசாய சங்கங்களின் கூட்டியக்கத்தின் மாநில அமைப்பாளர் பி.கே.தேவசிகாமணி ஈரோட்டில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– தேசியமயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வகை விவசாய கடன் மற்றும் நகைக்கடன்களையும் மத்திய, மாநில அரசுகள் உடனடியாக ரத்து செய்யவேண்டும். விவசாய விளை பொருட்களுக்கு 50 சதவீதம் லாபத்துடன் கூடிய விலை கிடைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். உள்நாட்டு விவசாயம் பாதிக்காத வகையில் அரசின் ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகள் அமைக்கப்பட வேண்டும். காவிரி மற்றும் முல்லைப்பெரியாறு பிரச்சினைகளில் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மத்திய அரசு விரைந்து உறுதியாக நிறைவேற்ற வேண்டும்.

நதிகள் இணைப்பு திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும். நதிகள், ஏரி குளங்கள், நீர் வழித்தடங்கள் தூர்வாரப்பட்டு பாசனம் எளிதாக நடைபெற நிரந்தர முறைகள் உருவாக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும். நீரை சேமிப்பதற்காக தடுப்பணைகள் கட்ட வேண்டும். <u>தடையில்லா மின்சாரம்</u>

மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வங்கிக்கடன் கொடுக்க கையாளும் மதிப்பீட்டை நஷ்ட ஈடாக வழங்கவேண்டும். விவசாயிகளுக்கு தடையில்லா முன்முனை மின்சாரம் தொடர்ந்து இலவசமாக வழங்க வேண்டும். காத்திருப்பில் உள்ள விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்கவேண்டும்.

பசும்பால் லிட்டருக்கு ரூ.35–ம், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.40–ம் விலை நிர்ணயம் செய்யவேண்டும். உற்பத்தியாகின்ற பால் முழுவதையும் மாநில அரசு கொள்முதல் செய்யவேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, இன்றும் (வியாழக்கிழமை), நாளையும் (வெள்ளிக்கிழமை) சென்னையில் உள்ள அனைத்து கட்சி தலைவர்களையும் கூட்டியக்க தலைவர்கள் சந்திக்க உள்ளோம்.

இவ்வாறு விவசாய சங்கங்களின் கூட்டியக்கத்தின் மாநில அமைப்பாளர் பி.கே.தேவசிகாமணி கூறினார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 676 எக்டேர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது



பெரம்பலூர் மாவட்டத்தில் 676 எக்டேர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராக உள்ளது.

மஞ்சள் சாகுபடி சமையலுக்கு சுவையூட்டவும் (விரளி மஞ்சள்), மருத்துவ குணங்களைத் கொண்டதும் (பனங்காழி மஞ்சள்), கிருமி நாசினியாகவும், மங்கலப்பொருட்களில் ஒன்றாகவும் (கிழங்குமஞ்சள்) பயன்படுத்தப்படும் பணப்பயிரான மஞ்சள் சாகுபடியில் ஈரோடு மாவட்டம் தமிழகத்தில் முதலிடம் வகிக்கிறது. நீர்வளம் மிக்க பகுதிகளில் பயிரிடப்படும் 10 மாத பயிரான மஞ்சள் பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பு 2015-16-ம் ஆண்டில் 676 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராகிவருகிறது.

அறுவடைக்கு தயார்நிலை வேப்பந்தட்டை வட்டாரத்தில் உள்ள அரும்பாவூர் மலையாளப்பட்டி நெற்குணம், அன்னமங்கலம், பூலாம்பாடி பகுதிகளில் 400 எக்டேர் பரப்பளவிலும், பெரம்பலூர் வட்டாரத்தில் உள்ள பெரம்பலூர், எசனை சோமண்டாபுதூர், செங்குணம், புதுநடுவலூர், அம்மாபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 130 எக்டேர் பரப்பளவிலும், வேப்பூர் வட்டாரத்தில் கீழப்புலியூர், சிறுமத்தூர், சித்தளி பகுதிகளில் 126 எக்டேர் பரப்பளவிலும், ஆலத்தூர் வட்டாரத்தில் 20 எக்டேர் பரப்பளவிலும் என மொத்தம் நடப்பு பருவத்தில் 676 எக்டேர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயார்நிலையில் உள்ளது. 2010-11-ம் ஆண்டில் மஞ்சள் சாகுபடி இம்மாவட்டத்தில் 939 எக்டேர் ஆகவும், 2011-12 ல் 1,740 எக்டேர் ஆகவும், 2012-13-ம் ஆண்டில் 1,355 எக்டேர் ஆகவும், 2013-14-ம் ஆண்டில் 958 எக்டேர் ஆகவும், 2014-15-ம் ஆண்டில் 764 எக்டேர் ஆகவும் இருந்தது. சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்துவிட்டதால் மஞ்சள் சாகுபடி படிப்படியாக குறைந்துள்ளது. வருகிற பருவத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பு விரிவடைய வாய்ப்புள்ளது. ஆண்டுதோறும் மே அல்லது ஜுன் மாதத்தில் மஞ்சள் ரைசோம்கள் விதைக்கப்பட்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது.

சொட்டுநீர் பாசனம் ஒரு ஏக்கருக்கு ஏறத்தாழ ரூ.40 ஆயிரம் முதல் ரூ.45ஆயிரம் வரை சாகுபடி செலவாகிறது. 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாசனம், குறைவான பராமரிப்பு செலவு, கூடுதல் கவனம், இவற்றை முழுமையாக கையாண்டு ஒரு ஏக்கருக்கு 20 டன்கள் சாகுபடி பெறமுடிந்தாலும், இதில் நான்கில் ஒரு பங்கு அதாவது 4 முதல் 5 டன் மட்டுமே பதப்படுத்தப்பட்ட மஞ்சள் கிடைக்கும், ஈரோடு மாவட்டத்தில் பராமரிப்பு செலவு மற்றும் தண்ணீர் பாய்ச்சும் நேரம் இவற்றை எளிதாக்கும் வகையில் சொட்டுநீர் பாசன முறையில் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. பெரம்பலூர் மற்றும் துறையூர் பகுதிகளில்

கை விரல் வடிவம் கொண்ட விரலி மஞ்சள் ரகம் அதிகம் பயிரிடப்படுகிறது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட் மூலம் தற்போது ஒரு கிலோவிற்கு பச்சை மஞ்சள் ரூ.30 முதல் ரூ.32 வரையும், பாய்லரில் வேகவைத்து பதப்படுத்தப்பட்டு பாலீஷ் செய்யப்பட்ட மஞ்சள் ஒருகிலோ ரூ.60 வரையும் கொள்முதல் செய்யப்படுகிறது. ஓரிரு நாட்களில் அறுவடை

பெரம்பலூர் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையின் போது இலையுடன் கூடிய மஞ்சள் அதிகம் விற்பனையாவதால் அதனை கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் பயிரிடப்படும் மஞ்சள் பொங்கல் பண்டிகை பயன்பாட்டிற்காக அறுவடைக்கு தயாராக உள்ளது. அவை இன்னும் ஓரிரு நாட்களில் அறுவடை செய்யப்பட்டு வெளிச்சந்தைக்கு கொண்டு வரப்படும். ஆண்டுதோறும் ஏற்படும் பருவநிலை மாற்றங்கள், பாரம்பரிய வாழ்க்கை மாற்றங்கள், மேற்கத்திய நாடுகளின் நாகரிக தாக்கம் இன்னும் பல்வேறு மாற்றங்கள் நம்மிடையே புகுந்துவிட்டாலும் நமது பாரம்பரிய தோட்டப்பயிரான மஞ்சளுக்கு, மக்களிடம் உள்ள மவுசு நீடித்து வருகிறது.

## வேளாண்மை பொறியியல் துறை மூலம் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.1 கோடி மானியம் அதிகாரி தகவல்




வேளாண்மை பொறியியல் துறை மூலம் திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.1 கோடி மானியம் வழங்கப்பட உள்ளதாக செயற்பொறியாளர் துரைசாமி கூறினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:–

மானியம்

வேளாண்மை பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை நிலவி வருவதை கருத்தில் கொண்டு வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண்மை எந்திரங்களை அரசு வழங்கி வருகிறது. 2015–2016–ம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் மற்றும் வேளாண்மை எந்திரமயமாக்கல் திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு நடவு எந்திரம், களை எடுக்கும் எந்திரங்கள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் ரூ.1 கோடியே 13 லட்சம் மானியத்துடன் வழங்க திட்டமிடப்பட்டு, நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

பெண் விவசாயிகளுக்கு...

சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு எந்திரங்களின் விலையில் 50 சதவீதமும், மற்ற விவசாயிகளுக்கு 40 சதவீதமும் மானியம் வழங்கப்பட உள்ளது.இந்த திட்டத்தில் பயன்பெற திருவாரூரை அடுத்த பவித்திரமாணிக்கம், மன்னார்குடி அந்தோனியார் கோவில் தெரு ஆகிய இடங்களில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களில் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட கருவிகளை விவசாயிகள் தேர்வு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## ஒட்டன்சத்திரத்தில் சின்னவெங்காய நடவுப் பணி தீவிரம்

ஒட்டன்சத்திரம் பகுதியில் சின்னவெங்காய நடவுப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. ஒட்டன்சத்திரம் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால் வடகாடு பகுதியில் உள்ள பரப்பலாறு அணை நிரம்பியது.

இதனால் முத்துப்பூபாலசமுத்திரம், பெருமாள்குளம், சடையன்குளம்,செங்குளம், ஜவ்வாதுப்பட்டி பெரியகுளம், பாப்பாகுளம்,காவேரியம்மாபட்டி பெரியகுளம் ஆகிய குளங்கள் நிரம்பின.

இதனால் சுற்றுவட்டாரக் கிராமங்களில் உள்ள கிணறு,ஆழ்குழாய் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் வெங்காய நடவுப் பணி இப்போது தீவிரமடைந்துள்ளது. அதேநேரத்தில் நடவுப் பணிக்கு ஆள்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து ஆள்கள் வரவழைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## வைகை அணையிலிருந்து ராமநாதபுரம் மாவட்ட பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு குறைப்பு

வைகை அணையிலிருந்து ராமநாதபுரம் மாவட்ட பாசனத்துக்காக திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. நிலையூர் பகுதிக்கு திறக்கப்பட்ட தண்ணீர் வியாழக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்ட பாசனத்துக்கு கூடுதலாக கடந்த திங்கள்கிழமை காலை முதல் 2500 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இந்நிலையில் வியாழக்கிழமை காலையில் 1000 கனஅடியாக தண்ணீர் குறைக்கப்பட்டு இப்போது 1500 கனஅடி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், நிலையூர் பாசனத்துக்கு திறந்துவிடப்பட்ட 500 கனஅடி தண்ணீர் வியாழக்கிழமை காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது மதுரை மாவட்ட பெரியாறு கால்வாய் பாசனத்துக்கு 1600 கனஅடியும், ராமநாதபுரம் மாவட்டப் பாசனத்துக்கு 1500 கனஅடியும், மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்துக்கு 60 கனஅடி என மொத்தம் 3160 கனஅடி தண்ணீர் வைகை அணையிலிருந்து திறந்துவிடப்பட்டுள்ளது.

## ஆண்டிபட்டி பகுதியில் முருங்கைக்காய் விலை கடும் உயர்வு: கிலோ ரூ.400-க்கு விற்பனை

ஆண்டிபட்டி பகுதியில் முருங்கைக்காய் விளைச்சல் குறைந்துள்ளதால் கிலோ ரூ.400-க்கு விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கண்டமனூர், கடமலைக்குண்டு, தெப்பம்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் முருங்கை பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் கடந்த மாதம் பெய்த தொடர் மழையால் பூக்கள் அழுகி கொட்டின. இதனால் பெரும்பாலான பகுதியில் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக வரத்து குறைவால் ஆண்டிபட்டி சந்தையில் முருங்கைக்காய் கிலோ ரூ.400-க்கு விற்பனையானது. இது குறித்து கடமலைக்குண்டை சேர்ந்த விவசாயி முத்தையா கூறியதாவது: ஆண்டிபட்டி வட்டாரத்தில் முருங்கைக்காய்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில்

சீசன் காலங்களில் வரத்து அதிகரிக்கும் போது கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்படும். தற்போது வரத்து குறைந்துள்ளதால் கிலோ ரூ.400-க்கு விற்பனையாகிறது. இதில் எங்களுக்கு போதிய லாபம் இல்லை. எனவே நிரந்தர விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

அமராவதி பாசன விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மடத்துக்குளம் வட்டத்தில் 3 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் வியாழக்கிழமை திறக்கப்பட்டுள்ளன. அமராவதி அணைப் பாசனம் மூலமாக ராமகுளம், கல்லாபுரம், எலையமுத்தூர், கொழுமம், குமரலிங்கம், மடத்துக்குளம், சோழமாதேவி, காரத்தொழுவு, கணியூர், கடத்தூர் உள்ளிட்ட 50- க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆண்டுதோறும் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, இப்பகுதிகளில் நெல் அறுவடைப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதை ஒட்டி மடத்துக்குளம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும் என விவசாயிகள் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை ஏற்று மடத்துக்குளம் வட்டத்தில் வேடபட்டி, மடத்துக்குளம், கொழுமம் ஆகிய மூன்று இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் வியாழக்கிழமை திறக்கப்பட்டுள்ளன. இதில், மடத்துக்குளம் எம்எல்ஏ சண்முகவேலு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நெல் கொள்முதல் பணியைத் தொடக்கி வைத்தார். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஈஸ்வரி, துணை மேலாளர் மணிகண்டன், விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விவசாயிகள் கோரிக்கை: கடந்த ஆண்டு வியாபாரிகள், இடைத்தரகர்களிடம் இருந்து மட்டும் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் நெல் விவசாயிகளுக்கு வாய்ப்புக் கிடைக்காமல், ஏராளமான விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். எனவே, தற்போது உண்மையான நெல் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### விளைபொருள் சேமிப்புக் கிடங்குக்கு பூமி பூஜை

அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சார்பில் ரூ. 78 லட்சம் மதிப்பில் வேளாண்மை விளைபொருள் சேமிப்புக் கிடங்கு கட்டும் பணிக்கான பூமிபூஜை புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, சங்கத் தலைவர் கே.பி.எஸ்.ராஜா தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாச்சலம், திருப்பூர் மக்களவை உறுப்பினர் சத்தியபாமா ஆகியோர் பூமிபூஜை செய்து பணியினைத் தொடக்கி வைத்தனர். இங்கு 500 மெட்ரிக் டன் வேளாண் பொருள்களைக் கெடாமல் பாதுகாக்க முடியும்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் என்.கிருஷ்ணராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சி.அப்பா நாயக்கர், ஈரோடு புறநகர் மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலர் டி.ஆர்.முனுசாமி நாயுடு, கூட்டுறவு சங்கத் தலைவர்கள் எஸ்.பி.ரமேஷ் எஸ்.பாலுசாமி, இ.செல்வராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

**புள்ளம்பாடி வட்டாரத்தில் நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பயிற்சி**

புள்ளம்பாடி வட்டாரத்தில் நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பயிற்சி நடந்தது. இப்பயிற்சியில் 40 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். லால்குடி அடுத்த புள்ளம்பாடி கிராமத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் 40 விவசாயிகளுக்கு நெல்லில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியை வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் துவக்கி வைத்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் முக்கியத்துவம் அதன்மூலம் பெறப்படும் கூடுதல் வருவாய் மற்றும் நச்சில்லா விளைபொருட்கள் பற்றி எடுத்துக் கூறினார். மத்திய அரசு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் உமாமகேஷ்வரி ஒருங்கிணைந்த உர நிர்வாகம், உயிர்

உரங்களின் பயன்பாடுகள், பூச்சி கொல்லிகளால் ஏற்படும் பல்வேறு தீய விளைவுகள், நன்மை செய்யும் பூச்சிகள் முக்கியத்துவம் பற்றியும், தீமை செய்யும் பூச்சிகளின் விளைவுகள் பற்றியும், விவசாயிகளை வயல் சூழல் ஆய்வுக்கு அழைத்து சென்று பூச்சி நோய்கள் நிர்வகிக்கும் முறைகள், தீமை செய்யும் பூச்சிகள், நன்மை செய்யும் பூச்சிகள் பயிர் எண்ணிக்கை, தூர்களின் எண்ணிக்கை, களை நிர்வாகம் பற்றியும் நேரடியாக வயல் சூழல் ஆய்வில் விளக்கினார். புள்ளம்பாடி வட்டார வேளாண் உதவி இயக்குனர் மணிவண்ணன், பி.பி.டி 5204 ரகத்தில் காணப்படும் பாக்டீரியல் இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த பசுஞ்சாண கரைசல் ஏக்கருக்கு 10 கிராம் தெளிக்கலாம், (அ) 60 கிராம் ஸ்டெப்டோமைசின் 200 லி. நீரில் கலந்து தெளிக்கவும். குலை நோயைக்கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் எதிரி உயிரியை ஏக்கருக்கு 400 கிராம் வீதம் 200 லி. நீர் கலந்து தெளிக்கவும். அதிக பாதிப்பு இருப்பின் டிரைசைக்ளோசோல் 200 கிராம் மருந்தினை தெளிக்க ஆலோசனை வழங்கினார். மற்றும் நெற்பயிரைத் தாக்கும் இதர பூச்சிகள் மற்றும் நிர்வாக முறைகள் பற்றியும் விளக்கி கூறினார். உற்பத்தி அலுவலர் ராமநாதன், ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம், களை நிர்வாகம் பற்றி விளக்கி கூறினார். வேளாண் அலுவலர் சோபனா ஒருங்கிணைந்த எலி நிர்வாகம் பற்றியும், வேம்பு சார்ந்த பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகள், தாவர பூச்சி கொல்லிகள், பூச்சி விரட்டிகள் முக்கியத்துவம் பற்றியும் தயாரிக்கும் முறைகள் பற்றியும் விளக்கி கூறினார். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பான உழவியல் முறைகளான பயிர் சுழற்சி முறைகளை கையாளுதல், விதை நேர்த்தி செய்தல், வயல் வரப்புகளை ஓரும் கழித்தல், பரிந்துரைப்படி உர நிர்வாகம் பற்றியும், கைவினை முறைகளான விளக்குப்பொறி, ஒட்டுப்பொறி, இனக்கவர்ச்சி பொறி அமைத்து பூச்சிகளை கண்காணித்தல், உயிரியல் முறைகளான நன்மை செய்யும் பூச்சிகளை ஊக்கப்படுத்த வயல் வரப்புகளில் தட்டைப்பறு விதைத்தல், விதை நேர்த்திக்கு சூடோமோனாஸ் உயிர் எதிர் பாக்டீரியாவை உபயோகித்தல், வெட்டுப்புழுக்களை கட்டுப்படுத்த என்.பி.வி. வைரஸ் தெளித்தல் போன்றவை பற்றி விளக்கினார். முன்னதாக, வேளாண் துணை அலுவலர் ரபிக்ஜான் வரவேற்றார். பயிற்சி ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பழகன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பிரின்ஸி தமிழ்மணி செய்திருந்தனர்.

கீழ்பவானி பாசனப்பகுதியில் இயந்திரம் மூலம் நெல் அறுவடைப்பணி தீவிரம்

கீழ்பவானி வாய்க்கால் பாசனப்பகுதியில் இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. பவானிசாகர் அணையிலிருந்து கடந்த ஆண்டு ஆகஸ்ட் 16 ம் தேதி கீழ்பவானி வாய்க்கால் ஒற்றைப்படை மதகுகளுக்கு நன்செய் பாசனத்திற்காக நீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 1 லட்சத்து 3 ஆயிரத்து ஐநூறு ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்நீரை பயன்படுத்தி விவசாயிகள் நெல் சாகுபடி செய்வது வழக்கம். பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்யப்படும் பல்வேறு ரக விதை நெல்லை வாங்கி நாற்றாங்கால் தயார் செய்து பின்னர் நடவு செய்தனர்.

இந்நிலையில் கடந்த டிசம்பர் 31 ம் தேதி கீழ்பவானி வாய்க்காலில் நீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து நெற்கதிர்கள் முற்றியுள்ள நிலையில் அறுவடைப்பணி தொடங்கியது. இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது. கீழ்பவானி வாய்க்காலில் விடப்பட்டுள்ள நீரை பயன்படுத்தி நெல் பயிரிட்டுள்ளோம். தற்போது நெற்கதிர்கள் முற்றியதாலும், நீர்நிறுத்தப்பட்டதால் வயல்களில் ஈரத்தன்மை குறைந்ததால் நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை பயன்படுத்தி அறுவடைப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியிலிருந்து நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள் வந்துள்ளன. ஒருமணி நேரத்திற்கு ரு.1400 இயந்திரத்திற்கு வாடகையாக வசூலிக்கப்படுகிறது. வரப்பின் ஓரத்தில் ஆட்களை பயன்படுத்தி நெல் அறுவடை செய்ய ஏக்கருக்கு ரு.600 செலவாகிறது. 2 மணி நேரத்தில் ஒரு ஏக்கர் அறுவடை செய்யப்படுவதால் இயந்திரத்திற்கு வாடகை ரு.2800 ம் ஆள்கூலி ரு.600 ம் என மொத்தம் ரு.3400 வரை செலவாகிறது.

முழுமையாக ஆட்களை பயன்படுத்தி நெல் அறுவடை செய்ய ரு.10 ஆயிரம் செலவாவதால் விவசாயிகள் இயந்திரத்தை பயன்படுத்தி நெல் அறுவடை செய்வதையே விரும்புகின்றனர் என்று கூறினர்.

இருமல், சளியை போக்கும் துளசி, தனியா




பனிக்காலத்தில் அடிக்கடி இருமல், சளி போன்ற பிரச்னைகள் ஏற்படும். இதை போக்கும் வகையில் துளசி, தனியா ஆகியவற்றை பயன்படுத்தி நெஞ்சக சளியை போக்கும் துளசி குடிநீர் தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்**: துளசி, ஏலக்காய், லவங்கம், பச்சை கற்பூரம். ஒரு லிட்டர் தண்ணீரை கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளவும். இதில், 2 பிடி அளவு துளசி, 2 ஏலக்காய், 5 லவங்கம், பச்சை கற்பூரம் சேர்த்து சுமார் ஒரு மணி நேரம் வரை ஊறவைத்து குடிக்கவும். இந்த குடிநீர் நெஞ்சக சளியை அகற்றுவதோடு இருமலை குணமாக்கும். காய்ச்சல், உடல் வலி சரியாகும். செரிமான கோளாறுகள் சீராகும். துளசி பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது.

துளசியை அடிக்கடி எடுத்துக்கொண்டால் முக வசீகரம் உண்டாகும். ரத்தம் சுத்தமாகும். உடல் ஆரோக்கியம் பெறும். பச்சை கற்பூரம் ரத்த அழுத்தத்தை குறைக்கும் தன்மை கொண்டது. ஏலக்காய் வாயு தொல்லையில் இருந்து விடுபட வைக்கும். லவங்கம் சீதள நோய்களை சரிசெய்யும். தனியாவை பயன்படுத்தி வறட்டு இருமலை போக்கும் குடிநீர் தயாரிக்கலாம்.

தண்ணீரை கொதிக்க வைத்து எடுத்துக் கொள்ளவும். இதனுடன் வறுத்த தனியா பொடி, பனங்கற்கண்டு சேர்த்து சுமார் ஒரு மணி நேரம் வரை ஊறவைத்து பின்னர் குடிக்கலாம். ஒரு டம்ளர் தண்ணீருக்கு கால் ஸ்பூன்

தனியா, கால் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்க்கலாம். இந்த குடிநீரை குடித்தால் வறட்டு இருமல், தொண்டை வலி சரியாகும். உள் உறுப்புகள் பலமாகும். நுரையீரல் கோளாறுகளுக்கு மருந்தாகிறது. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட தனியாவுக்கு வயிற்று புண்களை ஆற்றும் தன்மை உண்டு. குளிர்ச்சியை தரக்கூடியது. சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்க கூடியது. வயிற்றுபோக்கை தடுக்கும் பதிமுகத்தை பயன்படுத்தி குடிநீர் தயாரிக்கலாம். கேரளாவில் அதிகம் பயன்படுத்தும் மூலிகை பதிமுகம். ஆரோக்கியமான குடிநீருக்கு பயன்படும் பதிமுகம், நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். மர செதில்கள் மாதிரி இருக்கும். ஒரு டம்ளர் வென்னீருக்கு சிறிது பதிமுகம் சேர்க்கவும். சுமார் ஒரு மணிநேரம் ஊறவைத்தபின் அது சிவப்பு கலரில் இருக்கும். இந்த குடிநீர் வயிற்றுபோக்கு ஏற்படாமல் தடுக்கும். ரத்தநாளங்களில் அடைப்பு ஏற்படாமல் தடுக்கவல்லது. குடிநீரை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டதாக இருக்கிறது. சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. ரத்தத்தை சுத்தப்படுத்தும் ஆற்றல் உடையது. நோய் எதிர்ப்பு சக்தி உடையதாக அமைகிறது. தோல்நோய் வராமல் தடுக்கிறது.